# மார்ச்-8 சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்கள் !

ஆணாதிக்க சிந்தனை ஆண்களிடம் மட்டுமல்ல, பெண்களிடமும் விரவிக் கிடக்கும் சமுதாய அமைப்பில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வன்முறைக்கு ஆளாகாமல் இருக்க எச்சரிக்கையோடும் கட்டுக்குள்ளும் இருக்க வேண்டும் என்று பெண்களை உபதேசிக்கும் பழமைவாதிகள் வன்முறைக்கு ஆளாக்காதே என்று ஆண்களை உபதேசிப்பதேயில்லை.

சமுதாயத்தின் பொதுப் புத்தியை மாற்றுவதற்கு சபதமேற்க வேண்டிய நாள் இன்று - மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம்.

அரச குல பங்காளிச் சண்டையில் சபை நடுவே மானபங்கப் படுத்தப் பட்ட திரௌபதி, கானகத்தில் கடத்தப் பட்ட சீதை துவங்கி இன்றும் கருவறை முதல் கல்லறை வரை - கருக்கொலை, சிசுக்கொலை, இளம்பருவ விளையாட்டுப் பொருட்களிலிருந்து, கல்வி, வேலை வாய்ப்பு, பணியிடங்கள் உள்ளிட்ட அனைத்திலும் பாரபட்சம், வரதட்சணை, திருமணம், வீட்டுவேலை, பாதுகாப்பு, பாலியல் பிரச்னைகள், ஊடகங்களில் தவறான சித்தரிப்பு என இந்திய சமூகத்தில் பெண்களைத் துரத்தும் பிரச்னைகள் ஏராளம்.

அனைத்து சவால்களையும் சந்தித்து மேலெழுந்த, இந்திய தேசீய ராணுவ பெண்கள் பிரிவின் கேப்டன் லஷ்மி, வான்வெளியில் பறந்த கல்பனா சாவ்லா, ஒலிம்பிக்ஸில் முதல் தங்கம் வென்ற கர்ண மல்லேஸ்வரி என சாதனைப் பெண்களும் இந்தியாவில் ஏராளம்.

சர்வதேச மகளிர் தினத்திற்கு அடித்தளமிட்ட நியூயார்க் நகரின் நெசவாலைப் பெண் தொழிலாளர்கள் முன் வைத்த கோரிக்கைகளில் வாக்குரிமை மட்டுமே பெரும்பாலும் நடைமுறையில் கிடைத்துள்ளது.

அவர்கள் முன்வைத்த 8 மணி நேர வேலை, குறைந்த பட்ச ஊதியம், சங்கம் அமைக்கும் உரிமை ஆகிய கோரிக்கைகளுக்கான போராட்ட தேவை என்பது இன்றும் தொடர்கிறது.

பெண்களின் உரிமைகளுக்காகவும், உழைக்கும் பெண்களின் உரிமைகளுக்காகவும் இதுகாறும் உயிரையும் ஈந்தோர் உட்பட போராளிகள் அனைவரையும் நினைவு கூர்வோம் !

உரிமைகள் வென்றெடுக்கும் போராட்டப் பயணத்தைத் தொடர, அவர்களின் பெயரால் உறுதியேற்போம் !

பெண்ணுரிமைக்காக உளப்பூர்வமாகப் பாடுபடும் ஆண் தோழர்களுக்கும் நமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் !

உலகின் அனைத்து மகளிருக்கும், மகளிர் உரிமைப் போராளிகளுக்கும் புரட்சிகரமான மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் !

பெண்கள்- பெண் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற, BSNL ஊழியர் சங்கம் உத்வேகத்தோடு தொடர்ந்து போராடும் என உறுதி கூறுகிறோம் !